# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

**ஆணை நாள் 10.11.2020**

முன்னிலை

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8636/B/2019**

திரு. விஜயகாந்த் முத்து கிருஷ்ணன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஊராட்சி ஒன்றியம்,
குன்னூர். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திரு.விஜயகாந்த் முத்துகிருஷ்ணன் அவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், நீலகிரி மாவட்டம் அவர்கள் விசாரணையில் கலந்து கொண்டார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது 22.4.2019 குன்னூர் ஊராட்சி ஒன்றியம், ஹபத்தலை கிராம பஞ்சாயத்தில் உள்ள 15 வார்டுகளிலும் உள்ள சொத்து விபரங்கள், குடிநீர் இணைப்பு மற்றும் வார்டுகளின் வரவு செலவு உள்ளிட்ட விபரங்களை தகவலாக கோரி, 11 இனங்களில் பொது தகவல் அலுவலர், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் எதுவும் பெறப்படாத நிலையில், 27.5.2019 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார்.

மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 30.8.2019 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த மனுவின் மீது இன்று விசாரணை நடைபெற்றது.

4. இன்றைய விசாரணையின்போது, மனுதாரருக்கு தகவல் வழங்கப்படவில்லை என்று ஆணையம் கருதி, பொது தகவல் அலுவலர் இரண்டு நாட்களுக்குள் மனுதாரருக்கு உரிய தகவலை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

5. பொது தகவல் அலுவலர், விசாரணையின்போது உறுதியளித்தபடி, மனுதாரருக்கு தகவலை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாததால், இவ்வழக்கில் மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டது என்று ஆணையம் கருதி, இவ்வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA/86361B/2019</u>**

பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
குன்னூர் ஊராட்சி ஒன்றியம்,
நீலகிரி மாவட்டம்.

மனுதாரர்
திரு. விஜயகாந்த் முத்துகிருஷ்ணன்,
த/பெ முத்துகிருஷ்ணன்,
5/13339, ஸ்டான்லி பூங்கா,
குன்னூர், நீலகிரி மாவட்டம்.
**அலைபேசி** - 909 40 94 808,

Copy to: File
SS/PA 16/11/2020